# முதல்வர் மு.க.ஸ்டாலினின் சீரிய நடவடிக்கை!

3- ஆம் பக்கத் தொடர்ச்சி

கூட்டுறவு சங்கங்கள் ரூ.40.00 இலட்சம் மதிப்பீட்டில் ஏற்படுத்திடவும், 1,000 ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியின விவசாயிகளுக்குத் தீவனப்புல் வளர்க்கவும் விதைத் தொகுப்பு மற்றும் புல்கறணைகள் ரூ100 கோடி செலவில். வழங்கப்பட்டுள்ளன.

13 மகாத்மா காந்தி தொழிலாளர்கள் ஒப்பந்தம் மற்றும் திறன் மேம்பாட்டுக் கூட்டுறவு சங்கங்கள் மூலம் ரூ. 196 கோடி மதிப்பீட்டில் சுகாதார அங்காடிகள் அமைக்கப்படுவதற்கு ரூ. 98 இலட்சம் மானியம் வழங்கப்பட்டுள்ளது.

மகளிர் வாழ்வாதாரத் தொழில்களை மேற்கொள்ள தாட்கோ வழங்கும் ரூ.2.50 இலட்சம் மானியத் தொகை ரூ.6.00 இலட்சமாக உயர்த்தப்பட்டுள்ளது.

காஞ்சிபுரம் மாவட்டத்தில் வசிக்கும் வீடற்ற 443 இருளர் பழங்குடியின குடும்பங்களுக்கு ரூ.19.38 கோடி செலவில் வீடுகள் கட்டி வழங்கப்பட்டுள்ளது.

ஆதிதிராவிடர் குடியிருப்புகளில் ஆண்டுதோறும் ரூ.100 கோடி மதிப்பீட்டில் அடிப்படை உட்கட்டமைப்பு வசதிகள் மேம்படுத்தப்பட்டு வருகின்றன.

17 மாவட்டங்களில் ஆதிதிராவிடர் குடியிருப்புகளில் 20 சமுதாயக் கூடங்கள் ரூ.24 கோடி மதிப்பீட்டில் கட்டப்படுகின்றன. .

அழிவின் விளிம்பிலுள்ள பண்டைய இருளர் பழங்குடியினர்களுக்கு (Particularly Vulnerable Tribal Groups) 1094 புதிய வீடுகள் 50 கோடி ரூபாய் மதிப்பீட்டில் கட்டித் தர அரசாணை வெளியிடப்பட்டு பணிகள் நடைபெற்று வருகின்றன.

1000 தூய்மைப் பணியாளளுக்கு தமிழ்நாடு நகர்ப்புர வாழ்விட மேம்பாட்டு வாரியம் கட்டும் பயனாளிகள் பங்களிப்புடன் கூடிய வீடுகள் வாங்க மானியம் வழங்கப்பட்டுள்ளது.

சாதி வேறுபாட்டைக் களைய சமத்துவச் சுடுகாட்டுடன் சமூக நல்லிணக்கம் வளர்த்து வாழும் 37 மாவட்டங்களில் உள்ள 37 கிராமங்களுக்கு ரூபாய் 10 இலட்சம் நிதி வழங்கப்பட்டு, அக்கிராமங்களில் அடிப்படை வசதிகளை ஏற்படுத்தும் நடவடிக்கைகள் திராவிட மாடல் அரசு பொறுப்பேற்றது முதல் ஒவ்வொரு ஆண்டும் நடைபெற்று வருகின்றது.

2023 - 2024 ஆம் நிதியாண்டில் மாநில அரசு நிதியுதவியுடன் 12 நபர்களை கொண்ட மகளிர் சுய உதவிக் குழுக்களுக்கு ஒரு குழுவிற்கு ரூ.2.50,000/- வீதம் 229 குழுக்களுக்கு ரூ.5.72 கோடி மானியம் விடுவிக்கப்பட்டுள்ளது.

தூய்மைப் பணியாளர்களின் வாழ்வாதாரத்தை உயர்த்துவதற்காக தேசிய துப்புரவுப் பணியாளர்கள் நிதி மற்றும் மேம்பாட்டு கழகத்தின்மூலம் 587 தூய்மைப் பணியாளர்கள் மற்றும் அவர்தம் குடும்பத்தார்களுக்கு ரூ.1.09 கோடி கால முறை கடன் வழங்கப்பட்டுள்ளது.

**முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் ஆதிதிராவிட சமுதாய மக்களின் முன்னேற்ற த்தில் தனிக்கவனம் செலுத்தி வருவதன் காரணமாக வாழ்க்கைத்தரம் நாளுக்கு நாள் முன்னேற்றம் அடைந்து வருகிறது. அரசின் சீரிய முயற்சி காரணமாக ஆதிதிராவிட இளைஞர்கள் கல்வியிலும் தொழிலிலும் முன்னேற்றம் அடைந்து சமத்துவ சமுதாயத்தின் பிரதிநிதி களாக உருவாகி வருகிறார்கள். இந்தியாவின் தலைசிறந்த உயர்கல்வி நிறுவனங்களிலும், வெளிநாடுகளிலுள்ள சிறந்த கல்வி நிறுனங்களிலும் உயர் கல்வி படிப்பினையும், முனைவர் படிப்பினை மேற்கொண்டு வருகின்றனர்.**






பழங்குடியினருக்கான வாழ்வாதார திட்டத்தின் கீழ், வேளாண் பொறியியல் இயந்திரங்கள், சூரியமின் சக்தியுடன் இயங்கும் அரவை இயந்திரங்கள் வழங்குதல்



ஏகலைவா மாதிரி உண்டி உறைவிடப் பள்ளிகளுக்கிடையே ஆந்திரா மாநிலத்தில் நடைபெற்ற தேசிய அளவிலான விளையாட்டுப் போட்டிகளில் தமிழ்நாட்டின் சார்பில், பங்கேற்ற மாணவர்களுடன் கலந்துரையாடல்.

## காலை உணவுத் திட்டம் விரிவாக்கம்:

# முதல்வர் மு.க.ஸ்டாலினுக்கு சிறப்புமிகு வரவேற்பு!

### மாவட்டச் செயலாளர் திருத்தணி எஸ்.சந்திரன் எம்.எல்.ஏ. அறிவிப்பு!

திருவள்ளூர், ஜூலை 13-

திருவள்ளூர் மேற்கு மாவட்ட திமுக ஆலோசனை கூட்டம் கடம்பத்தூர் ஒன்றியம், மப்பேட்டில் நடைபெற்றது. கூட்டத்திற்கு மாவட்ட அவைத் தலைவர் கே.திராவிட பக்தன் தலைமை தாங்கினார். தலைமை செயற்குழு உறுப்பினர்கள் வி.ஜி.ராஜேந்திரன் எம் எல்ஏ, திருத்தணி எம். பூபதி, மாநில, மாவட்ட நிர்வாகிகள் ஆர்.டி.இ.ஆதிஷேசன், ஓ.ஏ.நாகலிங்கம் டாக்டர் வி.சி.ஆர்.குமரன், சி.ஜெயபாரதி, பா. உதயமலர் பாண்டியன், எம்.மிதுன்சக்ர வர்த்தி, பொதுக்குழு உறுப்பினர்கள் ப.சிட்டி பாபு, எஸ். கே.ஆதாம், பி.ராஜேஸ்வரி ரவீந்திரநாத் ஆகியோர் முன்னிலை வகித்தனர். ஒன்றிய செயலாளர் மோ.ரமேஷ் வரவேற்றார்.

கூட்டத்தில் மாவட்ட செயலாளர் திருத்தணி எஸ்.சந்திரன் எம்எல்ஏ கலந்து கொண்டு 15 ம் தேதி திருவள்ளூர் மேற்கு மாவட்டத்திற்கு உட்பட்ட கடம்பத்தூர் ஒன்றியம், கீழச்சேரி புனித அன்னாள் அரசு உதவி பெறும் தொடக்கப் பள்ளியில் தமிழ்நாடு முதலமைச்சரின் காலை உணவு திட்ட விரிவாக்கத்தினை தொடங்கி வைக்க வருகை தரும் தமிழ்நாடு முதலமைச்சரும், திமுக தலைவருமான மு.க.ஸ்டாலின் அவர்களுக்கு உற்சாக வரவேற்பு அளிக்க மேற்கொள்ள வேண்டிய பணிகள் குறித்து எடுத்துரைத்தார். மேலும் திருவள்ளூர் மத்திய மாவட்டத்திற்கு உட்பட்ட மாநில மாவட்ட கழக நிர்வாகிகள் ஒன்றிய நகர பேரூர் கழக செயலாளர்கள் அணிகளின் அமைப்பாளர்கள் துணை அமைப்பாளர்கள் உள்ளாட்சி பிரதிநிதிகள் கிளைக் கழக வார்டு கழக செயலாளர்கள் கழக மூத்த முன்னோடிகள் அனைவரும் பெருந்திரளாக தங்கள் பகுதியில் உள்ள பொதுமக்கள் மற்றும் கழகத்தினர்களை திரட்டி வந்து பத்தாயிரத்து மேற்பட்டோர் கலந்து கொண்டு கழகக் கூடிய அமைத்து தோரணைகள் அமைத்து வெகு சிறப்பான வரவேற்பு அளிக்க வேண்டும் என்று தெரிவித்தார். இக்கூட்டத்தில் ஒன்றிய நகர பேரூர் செயலாளர்கள் க.அரிகிருஷ்ணன், கூளூர் எம். ராஜேந்திரன், சி.சு.ரவிச்சந்திரன், ஆர்.ஜெயசீலன், வி. வினோத் குமார், ஆர்த்தி ரவி, என்.கிருஷ்ணன், ஜி. ரவீந்திரா, பி.டி.சந்திரன், ஜோதிக்குமார், மாவட்ட அணிகளின் அமைப்பாளர்கள் துணை அமைப்பாளர்கள் உள்ளாட்சி பிரதிநிதிகள் ஒன்றிய நகர பேரூர் கழக நிர்வாகிகள் கிளைக் கழக வார்டு கழக செயலாளர் நிர்வாகிகள் கழக மூத்த முன்னோடிகள் பலர் கலந்து கொண்டனர்.




கழக இளைஞரணி தி.மு.க. சார்பில் என் உயிரினும் மேலான என்ற கலைஞர் நூற்றாண்டு பேச்சு போட்டியில் கல்லூரி மாணவர்கள் பங்கேற்கும் வகையில் திருவள்ளூர் மத்திய மாவட்ட திமுக சார்பில் நேமிலிச்சேரியில் உள்ள ஜெயா கல்லூரியில் மாவட்ட இளைஞரணி அமைப்பாளர் கே.சுரேஷ்குமார் ஏற்பாட்டில் மாணவர்களுக்கு பேச்சுப் போட்டிக்கான விண்ணப்பம் படிவத்தை முன்னாள் அமைச்சரும் மாவட்ட கழகச் செயலாளர் ஆவடி சா.மு.நாசர் எம்.எல்.ஏ கல்லூரி முதல்வரிடம் வழங்கி கல்லூரி வளாகத்தில் உள்ள அறிவிப்பு பலகையில் ஒட்டினர். உடன் மாவட்டத் தலைவர் நடுகுத்தகை ம.ராஜி, ஒன்றிய கழகச் செயலாளர் டி.தேசிங்கு, ஜெயா கல்லூரி முதல்வர் குகன், மாவட்ட இளைஞரணி துணை அமைப்பாளர்கள் ஆர்.செந்தாமரை, ஜி.சி.சி.கருணாநிதி, விஜெ.உமாமகேஸ்வரன், அக்னி மாசெ.ராஜேஷ் , டி.பிரியாகுமார், ஒன்றிய கவுன்சிலர் கே.சுரேஷ்குமார் ஊராட்சி மன்ற தலைவர் தமிழ்ச்செல்வி, மற்றும் அணிகளின் அமைப்பாளர்கள் வழக்கறிஞர் பெ.வினோத், பிரவீன் குமார், துர்கா பிரசாத், ப.கந்தன், ஜெ.சாக்ரடீஸ், வாசுகி எட்வின், பிரதீப் உள்பட பலர் உள்ளனர்

## கள்ளச்சாராயம் விற்றால் கடும் தண்டனை!

# மதுவிலக்கு சட்ட திருத்த மசோதாவுக்கு ஆளுநர் ஒப்புதல்!

சென்னை, ஜூலை 13-

கள்ளக்குறிச்சியில் கள்ளச்சாராயம் குடித்து பலர் இறந்தனர். இதையடுத்து கடந்த மாதம் 29 ம் தேதி சட்டசபையில் மதுவிலக்கு திருத்த மசோதா நிறைவேற்றி அனுப்பி வைக்கப்பட்ட நிலையில் ஆளுநர் ஆர்.என்.ரவி ஒப்புதல் வழங்கி உள்ளார். இதனால் இனி கள்ளச்சாராயம் விற்போருக்கான தண்டனை கடுமையாக உள்ளது.

கள்ளக்குறிச்சி மாவட்டம் கருணாபுரத்தில் கடந்த மாதம் 18, 19 ஆகிய தேதிகளில் கள்ளச்சாராயம் குடித்து 150க்கும் அதிகமானவர்கள் பாதிக்கப்பட்டனர். இவர்களுக்கு தீவிர சிகிச்சை அளிக்கப்பட்டது.

இருப்பினும் சிகிச்சை பலனின்றி பலர் பலியாகி உள்ளனர். மற்றவர்கள் குணமாகி வீடு திரும்பினர்.

கள்ளச்சாராய விற்பனையை தடுக்க அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று அனைத்து தரப்பினரும் வலியுறுத்தினர். இதையடுத்து கள்ளச்சாராயம், போதைப் பொருட்கள் விற்பனையை தடுக்கும் வகையிலும், அதை விற்பவர் களுக்கு கடும் தண்டனை வழங்கும் வகையிலும் தமிழ்நாடு மதுவிலக்கு சட்ட திருத்த மசோதா 2024 என்பது சட்டசபையில் தாக்கல் செய்யப்பட்டு குரல் வாக்கெடுப்பு மூலம் நிறைவேற்றப்பட்டது.

அதன்பிறகு இந்த சட்ட திருத்த மசோதா ஆளுநர் ஆர்என் ரவியின் ஒப்புதலுக்கு அனுப்பி வைக்கப்பட்டது. இந்நிலையில் தான் மதுவிலக்கு சட்ட திருத்த மசோதா 2024க்கு ஒப்புதல் வழங்கி உள்ளார்.இந்த சட்டத்திருத்த மசோதா சட்டமாகும்போது கள்ளச்சாராயம் தயாரித்து விற்றால் ரூ.10 லட்சம் அபராதம் மற்றும் ஆயுள் தண்டனை வரை விதிக்கப்படும். இதுதவிர அவர்களின் அசையும் சொத்துகளும் பறிமுதல் செய்யப்படும்.

## 66 ஆண்டுகளுக்குப் பிறகு திருவான்மியூர்

# பாம்பன் குமரகுருதாசர் திருக்கோயில் குடமுழுக்கு விழா!

### அமைச்சர்கள் தா.மோ.அன்பரசன் - பி.கே.சேகர்பாபு பங்கேற்பு!

சென்னை, ஜூலை 13-

இந்து சமய அறநிலையத்துறையின் ஆளுகைக் குட்பட்ட சென்னை, திருவான்மியூர், பாம்பன் குமரகுருதாசர் திருக்கோயிலுக்கு 66 ஆண்டுகளுக்கு பிறகு நேற்று (12.07.2024) காலை திருக்குடமுழுக்கு நன்னீராட்டுப் பெருவிழா வெகு விமரிசையாக நடைபெற்றது.

இவ்விழாவில் குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் அமைச்சர் தா.மோ.அன்பரசன், இந்து சமய அறநிலையத்துறை அமைச்சர் பி.கே. சேகர் பாபு, சென்னை உயர்நீதி மன்ற நீதிபதிகள் பி.வேல் முருகன், ஆர்.எம்.டி. டீக்காராமன், என்.செந்தில்குமார், விருகம்பாக்கம் சட்டமன்ற உறுப்பினர் எம்.வி.பிரபாகர் ராஜா, இந்து சமய அறநிலையத் துறை சிறப்புப் பணி அலுவலர் ஜெ.குமரகுருபரன், ஆணையர் க.வீ. முரளீதரன், இணை ஆணையர்கள் உள்ளிட்ட அலுவலர்கள், இறையன்பர்கள் மற்றும் பொதுமக்கள் பெரும் திரளாக கலந்துக் கொண்டனர்.

பின்னர், இந்து சமய அறநிலையத்துறை அமைச்சர் பி.கே.சேகர்பாபு செய்தி யாளர்களிடம் தெரிவித்ததாவது:-

07.05.2021 அன்று தமிழ்நாடு முதலமைச்சராக முத்துவேல் கருணாநிதி ஸ்டாலின் என்ற பெயரில் பதவி ஏற்ற நாள் முதல் திருக்கோயில்கள் எங்கும் மணியோசையும், தீப ஆராதனைகளும், தேவாரம், திருவாசகங்களும், எங்கு நோக்கிலும் பக்தர்களின் பக்தி பரவசக் குரல்களும் ஓங்கி ஒலிக்கின்றன. ஆண்டுகள் பல கடந்து குடமுழுக்கு நடைபெறாமல் இருந்த திருக்கோயில்களில் குடமுழுக்கையும், தெப்பத் திருவிழா நடைபெறாமல் இருந்த திருக்கோவில் களில் தெப்பத் திருவிழாவையும், ஓடாமல் இருந்த மரத்தேர்கள், வெள்ளித் தேர்கள், தங்கத் தேர்களை முழுமையாக ஓட வைத்த பெருமையும் முதல்வர் அவர்களை சாரும்.

திருக்கோயில்களில் பக்தர்களின் அடிப்படை தேவைகளுக்காக விருந்து மண்டபம், முடிகாணிக்கை மண்டபம், சஷ்டி மண்டபம், திருமண மண்டபம், பக்தர்கள் தங்கும் விடுதி போன்றவற்றையும் இணை ஆணையர், துணை ஆணையர் மற்றும் உதவி ஆணையர்களுக்கு அலுவலகம் கட்டுதல், திருக்கோயில் அர்ச்சகர்கள் மற்றும் பணியாளர்களுக்கு குடியிருப்புகள், பொங்கல் கருணைத் தொகை, ஓய்வூதியம் உயர்வு, பொங்கலுக்கு புத்தாடைகள் வழங்குதல் என்று ஆன்மிக புரட்சியை இந்த ஆட்சி ஏற்பட்ட பிறகு 38 மாதங்களில் செய்வதற்கரிய பல செயல்களை இந்த ஆட்சி செய்து முடித்திருக்கின்றது.

இன்றைய தினம் 65 திருக்கோயில்களில் குடமுழுக்கு நடைபெற்றுள்ளது. குறிப்பாக 100 ஆண்டுகளுக்கு முன் குடமுழுக்கு நடைபெற்ற மணப்பாறை, முக்தீஸ்வரர் திருக்கோயில், பெரியபாளையம், பவானி அம்மன் திருக்கோயில் குடமுழுக்கு நடந்திருக்கின்றது. ஏழு கடல் தாண்டி, ஏழு மலை தாண்டி, ஏழு குகை தாண்டி அற்புத விளக்கை மீட்டோம் என்று பழங்காலத்தில் சொல்வதை போல இன்றைக்கு நீதிமன்றங்களின் நெடிய படிக்கட்டுகளில் ஏறி, 66 ஆண்டுகளுக்கு முன்பு குடமுழுக்கும், 36 ஆண்டுகளுக்கு முன்பு பாலாலயமும் செய்யப்பட்ட திருவான்மியூர், பாம்பன் குமரகுருதாசர் திருக்கோயிலுக்கு 18 ஆண்டுகளாக நீதிமன்றத்திலிருந்த வழக்கு முழுவதுமாக முடிவு பெற்று இன்றைக்கு முருக பக்தர்கள் மகிழ்ச்சி வெள்ளத்தில் திளைக்கும் வகையில் குடமுழுக்கு நடைபெற்றுள்ளது.

இது இந்த பகுதியில் மட்டுமல்லாது, நாடு முழுவதும், உலகமுழுவதும் குலதெய்வமாக முருகனை வழிபடுகின்றவர்கள். இன்றைக்கு பக்தி பரவசத்தோடு திராவிட மாடல் ஆட்சியின் நாயகன் முதலமைச்சர் அவர்களை பாராட்டுவதை எங்கும் கேட்க முடிகிறது. இங்கு கூடியிருக்கின்ற பல்லாயிரக்கணக்கான மக்கள் எங்களுக்கு வாழ்த்து சொல்வதிலிருந்து அவர்களின் மகிழ்ச்சியை அறிய முடிகிறது. இது போன்ற பணிகள் இந்த ஆட்சியில் தொடரும். இந்த குடமுழுக்கு விழா சிறப்புற நடைபெற துணைநின்ற நீதியரசர்கள், துறை உயர் அலுவலர்கள் உள்ளிட்ட அனைவருக்கும் இந்து சமய அறநிலைத்துறை சார்பில் நெஞ்சார்ந்த நன்றியை தெரிவித்துக் கொள்கிறோம்.

இந்த ஆட்சி ஏற்பட்ட பிறகு 1,921 திருக்கோயில்களுக்கு குடமுழுக்கு நிறைவு பெற்றுள்ளது. உபயதாரர்கள் அதிக அளவிற்கு தங்களுடைய பங்களிப்பை அளித்துள்ளார்கள். திருக்கோயில்களின் உண்டியல் வருமானம், சொத்துக்களின் மூலம் கிடைக்கப்பெறும் வருமானத்தை வைத்து தான் திருவிழாக்கள் மற்றும் இறைவனை நாடி வருகின்ற பக்தர்களுக்கு தேவையான அடிப்படை வசதிகளை இதுவரையில் நிறைவேற்றிகொண்டிருந்தோம். தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் இதுவரையில் இல்லாத அளவிற்கு ரூ.920 கோடியை அரசு மானியமாக இந்து சமய அறநிலையத்துறைக்கு வழங்கி இருக்கின்றார்கள்.

மூத்தக் குடிமக்கள் ஆன்மிக பயணம் செல்வதற்கு ஏதுவாக அறுபடை வீடு ஆன்மிகப் பயணம், ஆடி மாதத்தில் அம்மன் திருக்கோயில்களுக்கும், புரட்டாசி மாதத்தில் வைணவ திருக்கோயில்களுக்கும் ஆன்மிகப் பயணம், இராமேசுவரம் - காசி ஆன்மிகப் பயணம் போன்ற வசதிகளை ஏற்படுத்தி இருக்கின்றோம். ஒரே நாளில் அதிக எண்ணிக்கையில் குடமுழுக்கு நடைபெறுவது இந்து சமய அறநிலையத்துறை வரலாற்றில் 20 ஆண்டுகளுக்குப் பிறகு இன்று தான் என்று குறிப்பிடுகிறார்கள்.

திருக்கோயில் திருப்பணிகள், குடமுழுக்குகள் மன்னராட்சி காலத்தில் செய்தது போல் தமிழகத்தின் மாமன்னன் தளபதி ஆட்சியிலும் தொடரும். சிதம்பரம் நடராஜர் திருக்கோயிலில் பக்தர்கள் திருவிழாக் காலங்களிலும் கனகசபை மீதேறி தரிசனம் செய்திட நீதிமன்றத்தின் மூலம் அனுமதி பெற்றுத் தந்துள்ளோம் என்று தெரிவித்தார்.

# பூவிருந்தவல்லி நீதிமன்ற வளாகத்தில் படிப்பக கட்டடம்!

### ஆ.கிருஷ்ணசாமி எம்.எல்.ஏ. அடிக்கல் நாட்டினார்!

திருவள்ளூர், ஜூலை 13-

திருவள்ளூர் மாவட்டம் பூவிருந்தவல்லி ஒருங்கிணைந்த நீதிமன்ற வளாகத்தில் ரூ.26 லட்சம் மதிப்பில் புதிய படிப்பகம் கட்டடம் கட்டுவதற்கு ஆ.கிருஷ்ணசாமி எம்எல்ஏ அடிக்கல் நாட்டினார்.

பூவிருந்தவல்லி நீதிமன்ற வளாகத்தில் படிப்பகம் அமைக்க வேண்டும் என்று வழக்கறிஞர்கள் நீண்ட நாட்களாக கோரிக்கை வைத்து வந்தனர்.

இதையடுத்து பூவிருந்தவல்லி சட்ட மன்ற உறுப்பினர் ஆ. கிருஷ்ணசாமி தனது தொகுதி மேம்பாட்டு நிதியிலிருந்து புதிய படிப்பக கட்டடம் கட்டுவதற்கு ரூ.26 லட்சம் ஒதுக்கீடு செய்தார். இந்த கட்டடம் கட்டுவதற்கான பணிகளை தொடங்குவதற்காக நிகழ்ச்சி ஒருங்கிணைந்த நீதிமன்ற நீதிபதிகள் தலைமையில் நீதிமன்ற வளாகத்தில் நடைபெற்றது. இதில் ஆ.கிருஷ்ணசாமி எம்.எல்.ஏ அடிக்கல் நாட்டி பணிகளை தொடங்கி வைத்து வழக்கறிஞர்களுக்கு இனிப்பு வழங்கினார்

இந்த கட்டடப் பணிகளை விரைந்து முடித்து வழக்கறிஞர் பயிற்சி முடித்து வருபவர்கள் சட்ட நுணுக்கங்கள் சார்ந்த புத்தகங்களை இந்த படிப்பகத்தில் படித்து கொள்ளலாம் என தெரிவிக்கப்பட்டது.

இந்த நிகழ்ச்சியில் பூவிருந்தவல்லி நகர திமுக செயலாளர் ஜி.ஆர்.திருமலை, நகர் மன்ற துணை தலைவர் க.ஸ்ரீதர், பூந்தமல்லி வழக்கறிஞர்கள் சங்க தலைவர் ஏகாம்பரம் செயலாளர் கோபு, பொருளாளர் ஆனந்த் பாபு, நகர கழக நிர்வாகிகள் தாஜுதீன், துரைபாஸ்கர், அப்பர்ஸ்டாலின், டில்லிராணி மலர் மண்ணன், எஸ். அசோகுமார், ப.அன்பழகன் இரா.புன்னிய கோட்டி, எஸ்.சௌந்தர ராஜன், வட்ட செயலாளர் எம்.கே.சுகுமாரன், ஆசை தம்பி, உள்பட நகர் மன்ற உறுப்பினர்கள், கழக நிர்வாகிகள் வழக்கறிஞர்கள் உட்பட ஏராளமானோர் கலந்து கொண்டனர்.



தாம்பரம் மாநகராட்சி மண்டலம் 4, 51வது வார்டு தாம்பரம் மாநகராட்சி ஆதிதிராவிடர் அரசு மேல் நிலைப் பள்ளியில் திருப்பெரும்புதூர் நாடாளுமன்ற உறுப்பினரும் மக்களவை கழக குழு தலைவர் டி.ஆர்.பாலு அவர்களின் தொகுதி மேம்பாட்டு நிதியிலிருந்து கட்டப்பட்ட பள்ளியின் கட்டுமான பணி முடிந்த நிலையில் மாணவர்கள் பழைய கட்டிடத்திலிருந்து புதிய கட்டிடத்திற்கு வருகை தந்த நிலையில் தாம்பரம் மாநகர செயலாளர் எஸ்.ஆர்.ராஜா எம்.எல்.ஏ. மாணவர்களுக்கு இனிப்புகள் வழங்கி வரவேற்றார். உடன் மேயர் க.வசந்தகுமாரி, மண்டல குழு தலைவர்கள் பகுதி கழக செயலாளர்கள் டி.காமராஜ், எஸ்.இந்திரன் மற்றும் ஸ்ரீதர்பாபு, சி.சுரேஷ் எம்.சி., எல்.பெரியநாயகம் எம்.சி., ரமணி ஆதிமூலம் எம்.சி. மற்றும் பகுதி நிர்வாகிகள், வட்ட நிர்வாகிகள், இந்நிகழ்ச்சியில் கலந்து கொண்டனர்.